தினகரன் திருப்பூர்

RNI Regn.No.33699/77 Postal Regn No. CB/002/2024-2026

# கலைஞர் உருவச்சிலை பரிசு



உடுமலையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் உருவச்சிலையை நினைவு பரிசாக மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன் வழங்கினார். அருகில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஈஸ்வரசாமி எம்.பி. மற்றும் பலர் உள்ளனர்.

# குறு மைய அளவிலான தடகள போட்டி: மாணவர்கள் ஆர்வம்

திருப்பூர், ஆக. 13: திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் குறு மைய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் பெரும்பாலும் தனிநபர் மற்றும் குழு விளையாட்டு போட்டிகள் நடந்து முடிந்துள்ள நிலையில் தடகள போட்டிகள் நடைபெற்று வருகிறது. கடந்த வாரம் வடக்கு குறுமைய அளவிலான தடகள போட்டிகள் நடைபெற்று நிறைவடைந்துள்ள நிலையில் அவினாசி குறு மைய அளவிலான தடகள போட்டிகள் திருப்பூர் சிக்கண்ணா கலைக்கல்லூரி வளாகத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் அவிநாசி தாலுகாவைச் சேர்ந்த ஏராளமான பள்ளியைச் சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டிருந்தனர். 400 முதல் 3 ஆயிரம் மீட்டர் வரையிலான ஓட்டப்பந்தயம், ஈட்டி எறிதல், குண்டு எறிதல், தட்டு எறிதல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்ட மாணவ-மாணவிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் வெற்றி வரும் மாணவ- மாணவிகள் மாவட்ட அளவிலான போட்டிக்கு தேர்வு செய்யப்பட உள்ளனர்.



அவிநாசி குறு மைய தடகளப் போட்டிகள் திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்று ஓடிய மாணவிகள். 2வது படம்: ஈட்டிஎறிதல் போட்டியில் விளையாடிய மாணவி. கடைசிபடம்: உயரம் தாண்டுதல் போட்டியில் அசத்திய மாணவி.

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு போட்டி: வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்

## போலீஸ் கமிஷனர் வழங்கினார்

திருப்பூர், ஆக. 13: தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு, மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இதன் ஒரு பகுதியாக சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது.

இதில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ- மாணவிகளுக்கு மாநகர போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். உதவி ஆணையர் (கலால்) செல்வி மற்றும் கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.




போதை ஒழிப்பு விழிப்புணர்வு தொடர்பாக பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநகர போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் சான்றிதழ் வழங்கினார்.

# காய்கறி விதை தளைகள் மானியத்தில் பெறலாம் வேளாண் அதிகாரி தகவல்

திருப்பூர், ஆக. 13: திருப்பூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் புனிதவேணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருப்பூர் வட்டாரத்தில் தோட்டக்கலை- மலைப்பயிர்கள் துறை சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. தமிழகஅரசு ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தின் கீழ் மக்கள் மற்றும் விவசாயிகள் வீட்டுத்தோட்டம் அமைத்து நஞ்சில்லா உணவை தாங்களே உற்பத்தி செய்து ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்ய இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதில் தோட்டக்கலைத்துறை சார்பில் வீட்டுத்தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக தக்காளி, கத்திரி, மிளகாய், வெண்டை, கொத்தவரை மற்றும் கீரை விதைகள் ஆகிய 6 காய்கறி விதைகள் அடங்கிய காய்கறி விதை தளைகள் 100 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் திருப்பூர் வட்டாரத்தில் காட்டன் மார்க்கெட் வளாகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஆதார் அட்டை நகலுடன் சென்று காய்கறி விதை தொகுப்பு பெற்று பயன்பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு 7339136726, 9159068705, 7092608799, 8072390606 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். மேலும் https://tnhorticulture.tn.gov.in/kit/ என்ற இணையத்தில் பதிவு செய்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தாயுமானவர் திட்டத்தில் வீட்டுக்கே சென்று ரேஷன் பொருள் வழங்கும் திட்டம்

## உடுமலையில் எம்பி துவக்கிவைத்தார்

உடுமலை, ஆக. 13: தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கான ரேஷன் பொருட்களை அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கும் திட்டத்தை சென்னையில் நேற்று முதல்வர் ஸ்டாலின் துவக்கிவைத்தார். அதன்படி, உடுமலை பகுதியில் உள்ள கிராமங்களில் இத்திட்டத்தை பொள்ளாச்சி எம்பி ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார்.

மடத்துக்குளம் ஒன்றியம் கடத்தூர், எஸ்.வி.புரம், ஜல்லிப்பட்டி, தேவனூர்புதூர் ஆகிய இடங்களில் முதியோர்களின் வீடுகளுக்கு சென்று ஈஸ்வரசாமி எம்பி ரேஷன் பொருட்களை வழங்கினார். நிகழ்ச்சிகளில் முன்னாள் எம்எல்ஏ ஜெயராமகிருஷ்ணன், உடுமலை கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் மெய்ஞானமூர்த்தி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் மகாலட்சுமி முருகன், கணக்கம்பாளையம் ஊராட்சி முன்னாள் தலைவர் லதா என்ற காமாட்சி அய்யாவு மற்றும் திமுகவினர் பங்கேற்றனர். எஸ்.வி.புரத்தில் மாவட்ட திமுக செயலாளர் இல.பத்நாபன் பங்கேற்றார்.



தாயுமானவர் திட்டத்தின்கீழ் கணக்கம்பாளையம் கிராமத்தில் முதியோரின் வீட்டுக்கே சென்று ரேஷன் பொருள் வழங்கும் திட்டத்தை, ஈஸ்வரசாமி எம்பி துவக்கி வைத்தார். அருகில் முன்னாள் எம்எல்ஏ ஜெயராமகிருஷ்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

# பழங்கரை, பசூர், கானூர்புதூர் பகுதிகளில் நாளை மின்தடை

அவிநாசி, ஆக. 13: அவிநாசி மின்கோட்டம், பழங்கரை துணை மின்நிலையம், பசூர் துணை மின்நிலையம், கானூர் புதூர் துணை மின்நிலையம் ஆகிய இடங்களில் நாளை (வியாழன்) மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது.

எனவே, கானூர் துணை மின்நிலையத்தில் கஞ்சப்பாளையம், ராமநாதபுரம், கானூர்புதூர், செட்டிபுதூர், அல்லப்பாளையம், ஆலத்தூர், தொட்டிபாளையம், குமாரபாளையம், மொண்டிபாளையம், தாசராபாளையம், ஆம்போதி, பசூர் ஒருபகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஒருபகுதி ஆகிய ஊர்களிலும், இதேபோல பசூர் துணை மின்நிலையத்தில் பூசாரிபாளையம், இடையர்பாளையம், ஆயிமாபுதூர், செல்லனூர், ஜீவாநகர், ஒட்டர்பாளையம், அன்னூர் மேட்டுப்பாளையம், அம்மாசெட்டிபுதூர், மேட்டுக்காடுபுதூர், புதுப்பாளையம், பூலுவபாளையம் ஆகிய இடங்களிலும்,

பழங்கரை துணைமின் நிலையத்திற்கு உட்பட்ட அணைப்புதூர், விஸ்வபாரதிபார்க், ஸ்ரீராம்நகர், அவிநாசிலிங்கம்பாளையம், தங்கம்கார்டன், நல்லிக்கவுண்டன்பாளையம், தேவம்பாளையம், குளத்துப்பாளையம், ரங்காநகர் ஒருபகுதி, கைகாட்டிபுதூர் ஒருபகுதி, ஆர்.டி.ஓ. ஆபீஸ், வெங்கடாசலபதி நகர், கமிட்டியார் காலனி, குளத்துப்பாளையம், வி.ஜி.விநகர், துரைசாமி நகர், பள்ளிபாளையம், பெரியாயிபாளையம் ஒருபகுதி, நெசவாளர் காலனி, திருநீலகண்டர் வீதி, எம்ஜி.ஆர்.நகர், மகாலட்சுமி நகர், தன்வர்ஷினி அவன்யூ, முல்லைநகர் ஆகிய பகுதிகளிலும் நாளை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின்சார விநியோகம் தடைபடும் என்று அவிநாசி மின்கோட்டப் பொறியாளர் பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு பல்லடத்தம்மன் திருக்கோயில்**

இடுவாய், திருப்பூர் தெற்கு வட்டம் (ம) மாவட்டம் - 641 687

**முதன்முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

இத்திருக்கோயிலின் கீழ்க்கண்ட இனத்திற்கான முதன்முறை பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி எதிர்வரும் 02.09.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கு திருக்கோயில் வளாகத்தில் வைத்து விடப்படவுள்ளது

ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள்:- 02.09.2025 முற்பகல் 11.00 மணி

| வ. எண் | ஏலம் /ஒப்பந்தப்புள்ளி விடப்படும் இனம் | கிராமம் / சர்வே எண் / ஏக்கர் | குத்தகை காலம் | டேவனித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருக்கோயிலுக்குச் சொந்தமான புன்செய் பூமியில் சாகுபடி செய்யும் உரிமம் | இடுவாய் 212-9.97 ஏக்கர் | 3 ஆண்டுகள் | ரூ.500/- |

ஒப்பந்தப்புள்ளி படிவம் 01.09.2025 மாலை 5.00 மணி வரை திருக்கோயில் வளாகத்தில் வழங்கப்படும். இதர நிபந்தனைகளை திருக்கோயிலில் நேரில் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்

இடம் :- திருப்பூர்
நாள் : 11.08.2025,

அ.ஆதவன்
அறங்காவலர்

வெ.ஆ.எண்: 270/2025. செ.ம.தொ.அ/2025/திருப்பூர் 12.08.2025

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

# அமெரிக்காவின் அபரீத வரி விதிப்புக்கு எதிராக திருப்பூரில் இன்று போராட்டம்

திருப்பூர், ஆக. 13: அமெரிக்காவின் அபரீத வரி விதிப்புக்கு எதிராக திருப்பூரில் இன்று போராட்டம் நடைபெற உள்ளதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் டிரம்ப் சமீபத்தில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படுவதாக அறிவித்துள்ளார்.

மற்ற நாடுகளை விட இந்தியா அமெரிக்காவிற்கு அதிக வரி விதிக்கும் நாடாக இருப்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார். இதனால் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் வர்த்தகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

குறிப்பாக திருப்பூரில் இருந்து அமெரிக்காவிற்கு ஆண்டுதோறும் 18,000 கோடி ரூபாய் அளவிற்கு ஆயத்த பின்னலாடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. தற்போது இந்தியாவிற்கு உயர்த்தப்பட்டுள்ள வரி உயர்வு மற்றும் இந்தியாவின் போட்டி நாடுகளுக்கு குறைக்கப்பட்டுள்ள வரி ஆகியவற்றின் காரணமாக திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதி பாதிப்புக்குள்ளாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் திருப்பூரில் தொழில் நிறுவனங்கள் மட்டுமல்லாது அந்த தொழிலை நம்பி உள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய அமெரிக்க அரசின் நடவடிக்கையை கண்டிக்கும் வகையிலும், அமெரிக்கா அரசின் அராஜகத்திற்கு அடிபணியாமல் நமது நாட்டில் அதிக வேலைவாய்ப்பு அளித்து வரும் சிறுகுறு நடுத்தர தொழில்களையும், விவசாயத்தையும் பாதுகாக்க ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாய முன்னணி சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக திருப்பூரில் இன்று மாலை குமரன் நினைவகம் முன்பாக ஏஐடியுசி, சிஐடியு, எல்பிஎப், ஐஎன்டியூசி, எச்எம்எஸ், எம்எல்எப், ஏஐசிசிடியு, யுடியுசி மற்றும் ஐக்கிய விவசாய முன்னணி ஆகியவை சார்பில் முதற்கட்ட ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

**TASMAC**

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்**
**திருப்பூர் மாவட்ட மேலாளர் அலுவலகம்**
**இணைய வழி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**Ref No: 636/A3/2025**

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்து கொள்ள இணைய வழி மூலமாக மதுக்கூட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. தமிழ்நாடு அரசின் https://tntenders.gov.in/nicgep/app. என்ற இணையதளத்திலிருந்து 13.08.2025 காலை 10.30 மணிமுதல் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை (மாற்ற முடியாதது) பதிவிறக்கம்/ பதிவேற்றம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதி 28.08.2025 அன்று காலை 10.00 மணி ஆகும். இணைய வழி ஒப்பந்தபுள்ளி கீழ்கண்டவாறு திறக்கப்படும். இவ்வினத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

| வ. எண் | ஒப்பந்தபுள்ளி இனங்கள் | ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் | | |
|---|---|---|---|---|
| | | இடம் | நாள் | நேரம் |
| 1 | தொழில்நுட்ப ஒப்பந்தபுள்ளி (TECHNICAL BID) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருப்பூர் | 28.08.2025 (வியாழக்கிழமை) | காலை 11.00 மணி |
| 2 | விலை ஒப்பந்தபுள்ளி (PRICE BID) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருப்பூர் | 28.08.2025 (வியாழக்கிழமை) | மாலை 03.00 மணி |

**மாவட்ட மேலாளர்**
**டாஸ்மாக் லிட், திருப்பூர்**

வெ.ஆ.எண்: 272/2025. செ.ம.தொ.அ/2025/திருப்பூர் 12.08.2025

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"




## தீரன் சின்னமலை மகளிர் கல்லூரியில்

# போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்



திருப்பூர், ஆக. 13: தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நுகர்வோர் மன்றம் மற்றும் போதை பொருள் தடுப்பு மன்றம் சார்பாக போதை விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரியின் தலைமை செயல் அலுவலர் டாக்டர் ரேச்சல் நான்சி பிலிப் தலைமை தாங்கினார். விழாவில் சிறப்பு விருந்தினராக இன்ஸ்பெக்டர் இளங்கோ கலந்து கொண்டு மதுவின் தீமைகள், போதை பொருளால் ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் பாலியல் குற்றங்கள் தடுப்பு குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தொடர்ந்து இளைய சமுதாயம் போதை இல்லா தமிழகத்தை உருவாக்க போதை பொருள் தடுப்பு சட்டங்கள் குறித்தும், சமூக ஊடகங்களின் தீய தாக்கங்கள் பற்றியும் புரிந்து கொண்டு நாம் வாழும் சமுதாயத்திற்கு பெருமை தேடி தர முன்வர வேண்டும் என்று கூறினார்.

நிகழ்வில் முதல்வர் டாக்டர் மோகன சவுந்தரி முன்னிலை வகித்து வரவேற்றார். மேலும் மாணவிகளிடம் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளரும், வணிகவியல் துறை பேராசிரியருமான சந்திரகலா மற்றும் போதை பொருள் தடுப்பு மன்ற ஒருங்கிணைப்பாளரும், கணினி துறை தலைவருமான சத்யா ஆகியோர் செய்திருந்தனர். விழாவில், பேராசிரியர்கள், மாணவிகள் பங்கேற்றனர்.

